பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.150** **நாள் : 13.11.2016**

**<u>சொத்து வரி வசூலை ரொக்கமாக பழைய ரூ.1000/– மற்றும் ரூ.500/– நோட்டுகளில் செலுத்த சிறப்பு ஏற்பாடுகள் பொதுமக்கள் மத்தியில் வரவேற்பு! 14.11.2016 அன்று பணிநேரம் நீட்டிப்பு –</u>**

**<u>ஆணையாளர், முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு</u>**

மத்திய அரசு கடந்த 08.11.2016 அன்று ரூ.1000/– மற்றும் ரூ.500/– ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவித்தது. இருப்பினும் பொதுமக்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்தவேண்டிய வரிகளை செலுத்துவதில் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு பழைய ரூ.1000/– மற்றும் ரூ.500/– ரூபாய் நோட்டுகள் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்த வேண்டிய வரிகளை பொதுமக்கள் செலுத்தலாம் என மத்திய அரசின் 11.11.2016 நாளிட்ட அறிவிப்பினையடுத்து பெருநகர சென்னை மாநகராட்சி பழைய ரூ.1000/– மற்றும் ரூ.500/– ரூபாய் நோட்டுகள் மூலம் பொதுமக்கள் செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி மற்றும் இதர வரிகளை 13.11.2016 மற்றும் 14.11.2016 ஆகிய நாட்களில் செலுத்தலாம் எனவும், இதற்காக சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்து 446 சிறப்பு முகப்புகள் (Counters) அமைக்கப்பட்டுள்ளன எனவும், இம்முகப்புகள் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 வரை செயல்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இன்று 13.11.2016 பெருமளவில் பொதுமக்கள் தாங்கள் செலுத்தவேண்டிய சொத்துவரியினை பழைய ரூ.1000/– மற்றும் ரூ.500/– ரூபாய் நோட்டுக்களை கொண்டு செலுத்தி வருகின்றனர்.

இத்திட்டத்திற்கு பொதுமக்களிடம் ஏற்பட்டுள்ள நல்ல வரவேற்பினை தொடர்ந்து, 14.11.2016 அன்று தங்களது சொத்துவரி, தொழில் வரி மற்றும் இதர வரிகளை செலுத்த ஏதுவாக, சிறப்பு முகப்புகள் மாலை 6.00 வரை செயல்படும் என்பதனை தளர்த்தி பொதுமக்கள் 14.11.2016 அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு பிறகும் வரிகளை செலுத்தலாம் எனவும், அதனை பெற்றுக்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு ஏற்பாடுகள் செய்துள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் அறிவித்துள்ளார்.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி**